வருவாய்த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009

கடித நிலை எண். 28 நாள் 21.1.2009.

அனுப்புநர்
திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர்,
சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5

அய்யா,

பொருள்: நிலம்–ஒப்படை–வீட்டுமனை ஒப்படை–வீட்டுமனைப் பட்டாக்கள் அடமானம் வைத்து கடன் பெறக்கூடாது என்கிற நிபந்தனையை திருத்தி அரசாணை வெளியிடப்பட்டது– வருவாய் நிலை ஆணையில் மாற்றம் –செய்வது –ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை: 1. அரசாணை(நிலை) எண்532 வருவாய்த்துறை, நாள் 29.11.01.
2. கூடுதல் ஆணையர், நில நிர்வாக ஆணையரின் நேர்முக கடித எண்.எப்/51581/2001 நாள் 28.12.03.
3. சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையரின் கடித எண் எப்1/11932/2006 நாள் 31.7.2008.

*****

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசால் ஒப்படை செய்யப்படும் வீட்டுமனைப்பட்டாவை வருவாய் நிலை ஆணை எண் 21–இன் கீழ் அடமானம் வைக்கக் கூடாது என்கிற நிபந்தனையை தளர்த்தி கடன் மற்றும் மானியத்துடன் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வீட்டுமனைப் பட்டாவை அடமானம் வைக்கலாம் என ஆணை வெளியிடப்பட்டது. மேலும் இவ்வரசாணையில் வருவாய் நிலை ஆணை எண் 21–இல் திருத்தம் வெளியிடுவதற்கு தக்க திருத்த செயற்குறிப்பு அனுப்பும்படி சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. மேலே 2 மற்றும் 3ல் கண்டுள்ள கடிதங்களில் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் வரைவு திருத்த செயற்குறிப்பை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கீழ்கண்டவாறு அரசுக்கு அனுப்பி உள்ளார்.

"தமிழ்"

" தேசிய வங்கிகளில் கடன் பெறும் பொருட்டு வரவு மற்றும் ஊக்காதரவுத் தொகை திட்டமான இந்திர ஆவாஸ் யோஜனா மற்றும் பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டத்தின் கீழும் அடமானம் வைக்கலாம்"

Verified by TN eEstate

"ஆங்கிலம்"

" and to mortgage, in favour of the Nationalised Banks to avail loan under Credit-Cum-Subsidy Schemes like Indra Awas Yojana and Prime Minister Gramodaya Yojana"

இந்த வரைவுத் திருத்தச் செயற்குறிப்பு வருவாய் நிலை ஆணை எண் 21ன் கீழுள்ள "டி" நமுனாவில் நிபந்தனை எண் 9–ஐத் தவிர வேறெங்கும் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

3. அரசு மேற்காணும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கருத்தினை ஆய்வு செய்து வருவாய் நிலை ஆணை எண் 2–ல் டி நமுனாவில் நிபந்தனை எண் 9–ல் பின்வருமாறு–

"தேசிய வங்கிகளில் கடன் பெறும் பொருட்டு வரவு மற்றும் ஊக்காதரவுத்தொகை திட்டமான இந்திர ஆவாஸ் யோஜனா மற்றும் பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டத்தின் கீழும் அடமானம் வைக்கலாம்" என்று தமிழிலும்,

"and to mortgage, in favour of the Nationalised Banks to avail loan under Credit-Cum-Subsidy Schemes like Indra Awas Yojana and Prime Minister Gramodaya Yojana"

என்று ஆங்கிலத்திலும் சேர்த்துக்கொள்ளலாம் என அரசு ஆணையிடுகிறது.

4. இது குறித்து முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தக்க நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

11.1.09

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்:
வருவாய் (நி.மு.VI) பிரிவு) துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,சென்னை–9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9
இ.கோ./ உதிரி

Vendor Real Estate™